# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 26 /பேரூ/2026**
**நாள் : 01.04.2026**

ப. வீரப்பன்,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி, அரசு நகர், 7/6/127/A 26 சஞ்சய் காந்தி தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ப. வீரப்பன் என்பவரது 26.12.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.12.2025 அன்று பெறப்பட்டு, 26/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி, அரசுநகர், 7/6/127/A 26 சஞ்சய் காந்தி தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. ப. வீரப்பன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 26.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் 28.11.2025 நாளிட்ட குறிப்பாணை ந.க. எண். 7815/2023/அ3-ன்படியும் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் 01.12.2025 நாளிட்ட குறிப்பாணை ந.க. எண். 5168/2025/பேரூ.2ன்படியும் பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தேனி மாவட்டத்தில் உள்ள மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் புதிதாக துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் முன்னுரிமை அடிப்படையில் அரசாணை நிலை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.02.2024ன்படியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண். 227-228ன்படியும் பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் 01.01.2025 பணிமூப்பு பட்டியலின்படி 08.12.2025ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்திட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 26.03.2025 நாளிட்ட செயல்முறைகள் ந.க. எண். 302/2025/பேரூ.2-ல் உள்ளதுபடி முதன்முதலில் பணி நியமனம் பெற்ற தேதியில் அடிப்படையிலும் முன்னுரிமை பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்ற விதிகளுக்குட்பட்டும், நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு செயலாளர் அவர்களின் 22.03.1999 நாளிட்ட கடித எண். 37790/பேரு.2/98-2ன்படி முதுநிலையை கணக்கிடும்பொழுது பணியாளர்களை அவர்களது பணி நிலைக்கேற்ப வரிசைப்படுத்தி, அதன்படி முதுநிலை கணக்கிடப்பட வேண்டும். ஒரே ஊதிய விகிதம் உள்ள பல்வேறு பணியிடங்களை பொறுத்தவரை பணியாளர்கள் எந்த தேதியில் பணியில் சேர்ந்தார்களோ அந்த தேதியின் அடிப்படையிலேயே முதுநிலை கணக்கிடப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைக்கிணங்க முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளை கணக்கில் எடுத்துக்கொண்டு முன்னுரிமை பட்டியல் தயார் செய்ய வேண்டும்" என்ற மேற்கண்ட கடிதங்களில் உள்ள உத்தரவுகளுக்கு மாறாக செயல்பட்டு, மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் 15.12.2025 நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 21/2025ன்டி மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மணிகண்டன் அவர்கள் தன்னிச்சையாக முன்னுரிமை பட்டியல் தயார் செய்து அதை சம்பந்தப்பட்ட துப்புரவு பணியாளரான என்னிடம் கொடுத்து ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்று விளக்கம் கேட்டு அக்கடிதத்தை என்னிடம் சார்பு செய்து கையொப்பம் பெற்று ஆட்சேபனை கடிதம் பெறாமல் மேற்கண்ட விதிகளுக்கும், அரசு ஆணைக்கும், உயர் அலுவலரின் உத்தரவுக்கும் மாறாக திரு. சு. அழகர்சாமி என்பவரை தேர்வு செய்து அவருக்கு பதவி உயர்வு ஆணையை வழங்கியுள்ளார். ஆகவே ஐயா அவர்கள் மேற்கண்ட அரசு ஆணைக்கும், விதிகளுக்கும், உயர் அலுவலரின் உத்தரவுக்கு உட்பட்டு முன்னுரிமை பட்டியல் தயார் செய்து அந்த பட்டியலை எனக்கு சார்பு செய்யாமலும் என்னிடம் ஆட்சேபனை உள்ளதா என்று எழுத்துப்பூர்வமாக கடிதம் பெறாமலும், விதிகளுக்கு மாறாகவும், உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு எதிராகவும் முன்னுரிமை பட்டியலில் கல்வித்தகுதி அடிப்படையில் முதலாவது இடத்தில் இருக்கும் என்னை பின்னுக்கு தள்ளி முன்னுரிமை பட்டியலில் 3வது இடத்தில் இருக்கும் திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு துப்புரவு மேற்பார்வையாளர் காலிப் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்துள்ளார். ஆகவே விதிகளுக்கும், அரசாணைக்கும், உயர் அலுவலரின் உத்தரவுக்கு மாறாக தன்னிச்சையாக செயல்பட்ட திரு. மணிகண்டன் அவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்து தவறாக திரு. சு. அழகர்சாமிக்கு வழங்கிய உத்தரவை ரத்து செய்து முன்னுரிமைபடி முதலிடத்தில் இருக்கும் எனக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு உத்தரவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் திரு. ப. வீரப்பன் மற்றும் எதிர்மனுதாரரான மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு உரிய ஆவணம் மற்றும் அறிக்கையுடன் 03.03.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரரான திரு. ப. வீரப்பன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் அரசாணை நிலை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.02.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 28.11.2025 நாளிட்ட குறிப்பாணை ந.க. எண். 7815/2023ன்படி, பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு தூய்மைப் பணியாளர் பணியிலிருந்து பதவி உயர்வு அளிக்க முதன்முதலில் பணிநியமனம் பெற்ற தேதியினை அடிப்படையில் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது.
- ஆனால், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் பணியினை நியமனம் செய்வதற்கு முன்னுரிமை பட்டியலில் முதன்முதலில் நான்

பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக 21.07.2007ல் பணிநியமனம் செய்யப்பட்ட நாளினை கணக்கில் கொள்ளாமல் மேற்காணும் அரசாணை மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் குறிப்பாணைகளுக்கு மாறாக முன்னுரிமை பட்டியலில் 3வது இடத்திலிருக்கும் திரு. அழகர்சாமி என்பவருக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் விதிமீறி தன்னிச்சையாக பதவி உயர்வு ஆணை வழங்கியுள்ளார். மேலும் முன்னுரிமை பட்டியல் குறித்து ஆட்சேபனை உள்ளதா என்பது குறித்தும் என்னிடம் பெறப்படவில்லை.

- இந்நிலையில், சுயவிருப்பத்தின் அடிப்படையில் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணியிட மாற்றம் செய்யும்போது முன்கூட்டியே இடமாற்றத்தினால் பழைய முன்னுரிமை இழந்து மாற்றலாகும் பேரூராட்சியில் (மேலச்சொக்கநாதபுரம்) பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக (Junior Most) கருதப்படும் என எனக்கு அளிக்கப்பட்ட பணியிட மாற்ற ஆணையில் குறிப்பிடவில்லை. இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தால் நான் இடமாற்றம் கோரியிருக்கமாட்டேன்.

- எனவே பணியில் சேர்ந்த நாள் மற்றும் கல்வித் தகுதியின்படி முதலாவதாக இருக்கும் எனக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கிடவும், முறைகேடாக திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு வழங்கிய பதவி உயர்வு ஆணையினை இரத்து செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்", என தெரிவித்துள்ளார்.

4. எதிர்மனுதாரரான மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மேலச்சொக்கநாதபுரம், பேரூராட்சி சுய உதவிக்குழு பணியாளர் திரு. பொ. சேகர் என்பவர்கள் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- தேனி மாவட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் அரசாணை நிலை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.02.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 28.11.2025 நாளிட்ட குறிப்பாணையில் பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.
- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 1 துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தை தூய்மை பணியாளர்களின் மூலம் நிரப்பிட 01.01.2025ஆம் தேதிய மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் பணிமூப்புரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு தூய்மை பணியாளர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, 201 (ii) (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். அதில் பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார்.
- மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் 01.01.2025 அன்றைய முன்னுரிமைப் பட்டியலில் வ.எண்.1ல் உள்ள திரு. பொ. பவுன்ராஜ் மற்றும் 2வது இடத்தில் உள்ள திரு. பொ. பார்த்திபன் ஆகியோர் துப்புரவு மேற்பார்வையாளர் பணிக்கான கல்வித் தகுதியான 8ஆம் வகுப்பு தேர்ச்சி

பெறவில்லை என்பதால் வரிசை எண். 1 மற்றும் 2ல் உள்ள தனியர்களை பதவி உயர்வு குறித்து பரிசீலிக்கவில்லை. (Not considered)

- இந்நிலையில் மேற்காணும் அரசாணை நிலை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.02.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 28.11.2025 நாளிட்ட குறிப்பாணையின் அடிப்படையில், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 29.12.2010 தேதி முதல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த பணிமூப்புரிமை பட்டியலில் 3வது இடத்தில் இடம் பெற்றுள்ள திரு. சு. அழகர்சாமி என்பவர் இப்பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியில் சேர்ந்த நாளான 29.12.2010-ஐ கணக்கில் கொண்டும் மற்றும் கல்வித் தகுதி பெற்றுள்ளதன் அடிப்படையில் திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
- ஆனால் மனுதாரரான திரு. ப. வீரப்பன், தூய்மைப் பணியாளர் சுய விருப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 27.07.2021 அன்று பணியிட மாறுதலில் வந்துள்ளார். எனவே தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 201 (ii)ன்படி 27.07.2021 அன்று மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களில் கடைநிலை பணியாளராக (Junior Most) இருப்பதாலும், 01.01.2025 அன்றைய முதுநிலை பட்டியலில் வரிசை எண்.6ல் இடம் பெற்றுள்ள காரணத்தினாலும் மனுதாரரது கோரிக்கையான பதவி உயர்வு வழங்க விதிகளின்படி இயலாது.
- மேலும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட மூப்புரிமை பட்டியலில் தேனி மாவட்ட அனைத்து பேரூராட்சிகளில் பணிபுரியும் அனைத்து அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலைப் பணியாளர்களில் 01.01.2025ம் தேதிய பணியாளர்களில் முன்னுரிமை மற்றும் உரிய கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு 20 % பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / வரித் தண்டலர் பதவி உயர்வுக்கு மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்படும் பட்டியலில் மனுதாரரான திரு. ப. வீரப்பன், தூய்மைப் பணியாளர் என்பவரது முன்னுரிமையானது எவ்விதத்திலும் பாதிப்புகுள்ளாகாது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.
- பேரூராட்சி தொகுப்பில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் இடமாற்றம் கோரினால், இடமாற்றம் செய்யப்படும் பணியாளர்களின் பணிமூப்புரிமை அந்தந்தப் பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக (Junior Most) கருதப்படுவார்கள் என்ற நிபந்தனை குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பப்படும்.
- மேற்காணும் நிலையில், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் பதவி உயர்வு அடிப்படையில் துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தை விதிகளுக்குட்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. இதில் எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5. மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் விசாரணையின்போது தனது 27.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 21/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் -

அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.02.2024ன்படி , தேனி மண்டலம் தேனி மாவட்டம் பேரூராட்சிகளில் அதன்

நிலைக்கேற்ப திருத்திய அளவுகோலின்படி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7815/2025-1/அ3 நாள் 19.06.2025ன்படி மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சிக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் 1 எண்ணம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சிக்கு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தினை விதிமுறைகளுக்குட்பட்டு பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பித்திட சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் குறிப்பாணையின் அடிப்படையில் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 01.12.2025 நாளிட்ட குறிப்பாணை ந.க.எண். 5168/2025/பேரூ.2ல் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் பணி நியமனத்திற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் 01.01.2025ஆம் தேதிய நிலையில் பணி மூப்புரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு தூய்மை பணியாளர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், இப்பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களின் இறுதி மூப்புரிமை பட்டியல் தயார் செய்து வெளியிடப்பட்டு தூய்மை பணியாளர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். அதில், பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார்.

மேற்காணும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சிலேயே தூய்மை பணியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு பணிமூப்புரிமை பட்டியலில் வரிசை எண். 3-ல் இடம் பெற்றும் மற்றும் கல்வித் தகுதியாக 10ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றுள்ளதன் அடிப்படையில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தனியருக்கு துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுதாரரான மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர் திரு. ப. வீரப்பன் என்பவர் சுய விருப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து 27.07.2021ஆம் தேதி தூய்மை பணியாளராக பணியிட மாறுதலில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணியில் சேர்ந்தார். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார் என்பதன் அடிப்படையில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கான 01.01.2025ஆம் தேதிய முதுநிலை பட்டியலில் தனியர் வரிசை எண். 6-ல் பெற்றுள்ள காரணத்தினால் மனுதாரரது கோரிக்கை ஏற்க இயலாத நிலையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தவிரவும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 03.04.2025-ல் வெளியிடப்பட்ட தேனி மாவட்ட அனைத்து பேரூராட்சிகளில் பணிபுரியும் அனைத்து அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை பணியாளர்களின் 01.01.2025ஆம் தேதிய பணிமூப்புரிமை பட்டியலானது,

அப்பணியாளர்களில் முன்னுரிமை மற்றும் உரிய கல்வி தகுதி பெற்றவர்களுக்கு, 20 சதவீத பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / வரித் தண்டலர் பதவி உயர்வுக்கு, மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்படும் பட்டியலாகும். இப்பட்டியலில் புகார் மனுதாரரான திரு. ப. வீரப்பன் தூய்மை பணியாளர், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி என்பவரது முன்னுரிமையானது எவ்விதத்திலும் பாதிப்புக்கு உள்ளாகாது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது " என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி சுய உதவிக்குழு பணியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 26.12.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு தூய்மைப் பணியாளர்கள் மூலம் பதவி உயர்வு அடிப்படையில் நிரப்புவதற்கான முன்னுரிமை பட்டியலை பேரூராட்சி செயல் அலுவலரால் தயாரிக்கும்போது திரு. ப. வீரப்பன் என்பவரின் ஆட்சேபனை கடிதம் பெறாமலும், முதன்முதலில் பணியில் சேர்ந்த நாள், கல்வித்தகுதி ஆகியவற்றை பரிசீலிக்காமலும் முன்னுரிமை பட்டியலில் முதலாவது இடத்தில் இருக்கும் தன்னை (மனுதாரரை) பின்னுக்கு தள்ளி, 3வது இடத்திலுள்ள திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வு விதிமீறி வழங்கப்பட்டுள்ளது எனவும், அதனை இரத்து செய்து, தனக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் திரு. வீரப்பன் என்பவர் தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக 21.07.2007 அன்று முதன்முதலில் பணியில் சேர்ந்து, தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 27.07.2021 அன்று தூய்மைப் பணியாளர் பணியில் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதை மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியால் தயாரிக்கப்பட்ட 01.01.2025ஆம் தேதிய முன்னுரிமை பட்டியல் மூலம் அறிய வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். அதில் பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார் என வரையறுக்கப்பட்டுள்ளது என்பதும், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் 01.01.2025 அன்றைய முன்னுரிமைப் பட்டியலில் வ.எண்.1ல் உள்ள திரு. பொ. பவுன்ராஜ் மற்றும் 2வது இடத்தில் உள்ள திரு. பொ. பார்த்திபன் ஆகியோர் துப்புரவு மேற்பார்வையாளர் பணிக்கான கல்வித் தகுதியான 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை என்பதால் வரிசை எண். 1 மற்றும் 2ல் உள்ள தனியர்களை பதவி உயர்வு குறித்து பரிசீலிக்கவில்லை. (Not considered) எனவும் இந்நிலையில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 29.12.2010 தேதி முதல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த பணிமூப்புரிமை பட்டியலில் 3வது இடத்தில் இடம் பெற்றுள்ள திரு. சு. அழகர்சாமி என்பவர் இப்பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியில் சேர்ந்த நாளான 29.12.2010-ஐ கணக்கில் கொண்டும் மற்றும் கல்வித் தகுதி பெற்றுள்ளதன் அடிப்படையில் திரு. சு. அழகர்சாமி என்பவருக்கு துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதும் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மனுதாரரான திரு. ப. வீரப்பன், தூய்மைப் பணியாளர் சுய விருப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில்

27.07.2021 அன்று பணியிட மாறுதலில் வந்துள்ளார். எனவே 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளில் விதி 201 (ii)ன்படி 27.07.2021 அன்று மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களில் கடைநிலை பணியாளராக (Junior Most) இருப்பதாலும், 01.01.2025 அன்றைய முதுநிலை பட்டியலில் வரிசை எண்.6ல் இடம் பெற்றுள்ள காரணத்தினாலும் மனுதாரரது கோரிக்கையான பதவி உயர்வு வழங்க விதிகளின்படி இயலாது என்பதும் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்காணும் நிலையில், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி இனி வருங்காலங்களில் பேரூராட்சி தொகுப்பில் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் இடமாற்றம் கோரினால், கோரிக்கை ஏற்கப்படும் நேர்வில் இடமாற்றம் செய்யப்படும் பணியாளர்களின் பணிமூப்புரிமை அந்தந்தப் பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக (Junior Most) கருதப்படுவார்கள் என்ற நிபந்தனை குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பப்படுவதை உறுதி செய்திடுமாறு மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்றம் நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ப. வீரப்பன்,
   பழனிசெட்டிபட்டி, சஞ்சய் காந்தி தெரு,
   அரசு நகர், தேனி மாவட்டம் - 625 531
2. செயல் அலுவலர்,
   மேலசொக்கநாதபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032